வாசிக்க: ஆதியாகமம் 22:1-19

***"விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியைக் கடவுளுக்குச் செலுத்தினான்" (எபி 11:4)***

கடவுளை ஆண்டவராக அல்லது ஆளுநராக ஏற்றுக்கொள்வதே உண்மையான விசுவாசம். அவரே நமது ஆராதனைக்கும் (எபி 11:4), அடிபணிதலுக்கும் (எபி 11:7) தகுதியானவர். நமது வாழ்வில் முதலிடமும் முழு முக்கியத்துவமும் அவருக்கே அளிக்கப்படவேண்டும். கடவுளுடைய கர்த்தத்துவத்தில் விசுவாசம் வைப்பது நம்மை நால்வகை செயல்பாட்டிற்குள் நடத்தும்.

r கடவுளே நமது ஆண்டவர் என்போமானால் நமது உசிதத்தால் அவரைக் கனப்படுத்துவோம். நம்மிடம் உள்ளதெல்லாம் அவர் கொடுத்ததே. காயீன் நிலத்தின் கனிகளைக் கொண்டு வந்தான்; ஆபேலோ தன் மந்தையின் "தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான் (ஆதி 4:3,4). இருவருக்குமிடையே உள்ள வேறுபாட்டைப் பாருங்கள். "கடவுளுக்கு எவ்வளவு தருகிறோம் என்பதல்ல, கடவுள் தந்தவற்றில் எவ்வளவு நாம் எடுத்துக்கொள்கிறோம் என்பதே கணக்கு" என்றார் பக்தர் ஒருவர். கடவுள் நமக்களித்த தருணம் (time), திறமை (talent), தனம் (treasure) ஆகிய ஈவுகளின் பொறுப்பாளிகள் நாம். கடவுள் நமது உசிதங்களைப் பெறத் தகுதியானவர்.

r கடவுளை ஆண்டவரென ஏற்கும் விசுவாசம் மாட்சிமையான அவருக்கு நம்மைப் பூச்சியாகக் கருதி கிறிஸ்துவின் இரத்தத்தின் மேன்மையினால் மட்டுமே நிற்க நம்மை நடத்தும். "பரிசுத்தத்தலத்தில் நுழைவதற்கு இயேசுவின் இரத்தத் தினாலே நமக்கு உண்டான தைரியமே" விசுவாசம் (எபி 10:19,20). மற்றபடி நாம் மண்தான். "மனிதனை நீர் தினமும் விசாரிக்க அவன் எம்மாத்திரம்?" என்ற யோபு வின் வார்த்தைகளே நம் வார்த்தைகளாகட்டும். கடவுளே நமது ஆண்டவரென விசுவாசிப்போமானால் நமது ஒன்றுமில்லாமையை ஒத்துக்கொண்டு, *"இயேசு போதுமே"* என்று குதூகலமாய்ப் பாடுவோம்.

r அடுத்து வருவது கடவுளின் ஞானம். மனித அறிவு தேவ ஞானத்திற்கு முன் கால் தூசி பெறாது (1 கொரி 1:25). அவர் ஆண்டவர்! அவருடன் வாதாடுபவர் யார்? தனது ஒரே குமாரனைப் பலியிடும்படி கடவுள் எப்படி ஆபிரகாமைக் கேட்கலாம் என்போமோ? (எபி 11:17). கடவுள் நமக்கு ஆண்டவரானால் நமது குருவி மூளை இவ்விதக் குறுக்குக் கேள்விகளைக் கேட்காது. முடிவு எப்படியானது பார்த்தீர்களா? நமக்கு நிகழ்காலம் மட்டுமே தெரியும்; கர்த்தருக்கோ எதிர்காலமும் தெரியும். அவரது நினைவுகளும் வழிகளும் நம்மைவிட வானளவு உயர்ந்தவை (ஏசா 55:8,9).

r கடவுள் நமது ஆண்டவரானால் நாம் ஆசீர்வாதத்தையல்ல, ஆசீர்வதிக்கும் அவரையே வணங்குவோம். ஆபிரகாமும், சாராளும் தங்களது முதிர்காலப் பால கனோடு மனமொன்றிப்போயிருந்திருப்பர். தேவனோ தாம் கொடுத்ததைத் திரும்பக் கேட்டார். நாம் பெற்ற ஆசீர்வாதங்களை, நமது கிரீடங்களை, அவரது பாதத்தில் படைப்போம். கடவுளின் ஆசீர்வாதங்களில் மகிழ்ந்திருந்தாலும் அவை நமது சிலை களாகிவிடாதபடிக் கவனமாயிருப்போம். "பூலோகத்தில் உம்மைத்தவிர எனக்கு வேறே விருப்பமில்லை" என்ற தாவீதின் ஆசையைப் பாருங்கள்! (சங் 73:25).